
# முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்

## சிறுவர் பாடல்கள்



ஜெனீரா அமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்

## (சிறுவர் பாடல்கள்)



ஜெனீரா தௌபீக் கைருல் அமான்

வெளியீடு :

அல் – அக்தாப் இலக்கிய மன்றம்

கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Title | :- | Muflihavin Siruvar Ganankal |
| Subject | :- | Childrens Rhyme |
| ISBN | :- | 978 - 955 - 0161 - 01 -0 |
| Fist Edition | :- | 2012.12.25 |
| Author | :- | Jeneera Thowfeek Hairul Aman<br>Ehuthar Hajiyar Road,<br>Kinniya -06 |
| Telephone | :- | 026 -2236487 |
| Copy Right | :- | Author |
| Printed by | :- | SS Digital's<br>No: 58, Vidyalayam Road,<br>Trincomalee.<br>026-2224933, 0715415854 |
| Pages | :- | VIII + 70 = 78 |
| Price | :- | Rs. 200.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கிழக்கிலங்கையில் இலக்கியத் துறையில் பெண்களின் பிரவேசம் வரண்டுள்ள நிலையில் அதுவும் இஸ்லாமிய பெண்களின் பங்களிப்பு அறவே அற்றநிலையில் கோடை மழையாக குழந்தைகளின் இலக்கிய வடிவமாக "முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்" காணக்கிடைத்தமை மட்டில்லா மகிழ்ச்சிக் குரியது.

வாண்மையுள்ள ஆசிரியத்தின் எச்சமாக தேடல், சுவைத்தல், ஆர்வம், அனுபவம் ஆகியவற்றின் விளைவாக இந்த இலக்கிய முயற்சி உருவாகியதென நம்புகின்றேன். படைப்புக்களை பிரவேசிக்கும் போதுதான் இலக்கியவாதி இன்புறுகிறாள். அந்த வகையில் "ஜெனீரா தௌபீக் ஹைறுல் அமான்" அவர்களின் ஆறாவது சுகப்பிரவேசம் இதுவாகும்.

ஆரோக்கியமான இஸ்லாமிய மரபுசார் குடும்பப் பின்னணியுள்ள இலக்கியத்தாரகை "ஜெனீரா" ஆசிரியையாகவும், படைப்பாளியாகவும். இலங்கையில் முன்னனி இலத்திரனியல் ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் தன்னை இனங்காட்டி பாராட்டுப் பெற்றவர். இவரது "முப்லிஹாவின் சிறுவர் கானம்" தற்போதைய சமூகத்திற்கு ஒழுக்க விழுமியங்களை புடம் போட்டுக் காட்டப் போதுமானது, இலக்கியநயம்மிக்கது, பாராட்டத்தக்கது இயற்கை வளம் மிக்க கிண்ணியாவில் இலக்கியமணம் வீசும் குடும்பத்தில் இனியகணவரின் துணையுடன் பயணிக்கும் "ஜெனீரா தௌபீக்கின்" இலக்கிய பயணம் தொடர்ந்துயர வாழ்த்துகின்றேன்.

தேசகீர்த்தி அல்-ஹாஜ் U.L முகம்மது ஹாஸிம், JP.<br>
BA(Hon)> Dip in Ed> MA.(SLEAS I)<br>
வலயக் கல்விப் பணிப்பாளர், கிண்ணியா<br>
12-12-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இன்று கிழக்கின் முக்கிய சிறுவர் இலக்கியப் படையாளியாகத் திகழ்கின்றவர்களில் ஜெனீரா தௌபீக் ஹைருள் அமான் ஒரு முக்கியமானவராவார். சிறந்த ஒரு படைப்பிலக்கிய வாதியாக அதிலும் பெண் எழுத்தாளராகத் திகழும் இவர் திருமலை மண்ணுக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம் என்றால் அது மிகையாகாது.

சிறுவர் தம் உள்ளக் கிடக்கைகளையும், அவர் தம் விளையாட்டு உணர்வுகளையும் தாம் ரசித்து சுவைத்த வாழ்வியலோடு சேர்த்து சிறுவர்களுக்கு விருந்து படைத்திருக்கின்றார் ஜெனீரா அவர்கள்.

சிறுவர் பாடல்கள் அடங்கிய இத்தொகுப்பில் 35 பாடல்கள் இடம்பெறுகின்றன. அவற்றை மூன்று வகையாக எண்ணிப்பார்க்க முடிகின்றது. ஒன்று இயற்கையின் வனப்பு அவற்றின் அழகின் உயர்வு இரண்டு வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான வழிகளும் அவற்றின் பெரியார்களும் மூன்றாவது சமூகத்திற்கான தனது கருத்துக்களை சொல்லுதல் என்னும் கருத்துக்களில் அமைந்துள்ளது.

சிறுவர்களுக்கு விருப்பமான ரோசா, புள்ளிமான், தவளை, சேவல், வண்ணத்துப்பூச்சி, பருந்து, வயல் காட்சி, மரம் நடுவோம், செந்தாமரை என்பன இயற்கை அழகுடன் எம்மோடு அன்றாடம் சேர்த்து இருக்கும் பொருட்களாக இருப்பதுடன் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியையும் அற்றின் மேல் நீங்காத பிரியத்தையும் ஏற்படுத்துவன.

சிறுவர்களுக்கு அறிவைப் புகட்டுவதும் சிறிய சிறிய சம்பவங்களைச் சொல்லி அவற்றின் மூலம் அவர்களை வழிப்படுத்துவதும் ஜெனீரா அமானின் அதிகமான சிறுவர் பாடல்களில் காணப்படுகின்றன. இன்றைய இயந்திர வாழ்வில் சிறுவர்களை கவனிக்கவே முடியாமல் பறந்து கொண்டு இருக்கும் எமக்கும் எமது சிறுவர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று நிதானித்து வாழ்க்கையை சுகிக்க இவரது சிறுவர் பாடல் தொகுப்பு ஒரு உரம் சேர்ந்த வளமாக அமையும் என்பது திண்ணம்.

அத்துடன் அவர்கள் வாழும் சூழலை அப்படியே இப்பாடலின் மூலம் அவர் படம் பிடித்துக் காட்டியுள்ளார், எமது பண்பாட்டின் விழுமியங்களையும் அவற்றின் அவசியத்தையும் சிறுவர்கள் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறான சிறுவர் படைப்புக்கள் நிறையவே வரவேண்டும். அவர் இன்னும் புதிய புதிய படைப்புக்களை சிறுவர்களுக்கு வழங்க வேண்டும்.

அன்புடன்
க.அன்பழகன்
கலாசார உத்தியோகத்தர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உள்ளத்திலிருந்து

அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்.

எனது ஆக்கங்களை வாசிக்கும் அன்பான உள்ளங்களுக்காக என் ஆறாவது நூலைச் சமர்ப்பிப்பதில் பெருமிதமிதமடைகின்றேன். ஆண்டு தோறும் ஓர் நூலையேனும் பிரசவிக்குமாறு பல அபிமானர்கள் கேட்கின்றனர். ஆனால முயற்சித்தாலும் முடியாமல் போகிறது. இலக்கியம் என்னும் பரந்த உலகில் பல உயர்ந்த உள்ளங்களையும், சிறந்தமனிதர்களையும் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் தரும் ஊக்குவிப்பானது இன்னும் எழுத வேண்டும் என்னும் வேட்கை என்னுள் எழுகிறது. எந்தக் கவலையும் இல்லாத மகிழ்ச்சிகரமான சுதந்திரத் துறையாக எழுத்துத் துறையைக் காண்கின்றேன். எனவே இத் துறையை அதிகம் நேசிக்கிறேன்.

சிறுவர் இலக்கியம் படைப்பதானது, சிறுவர்களின் மன உணர்வுகளைப் புரிந்து அதற்கேற்ப எழுத வேண்டும். நான் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குக் கற்பிப்பதால் சிறார்களுடன் சுமுகமாகப் பழகும் வாய்ப்புக் கிடைக்கிறது. மாணவர்களின் குணாதிசயங்களைப் புரிந்து அவர்களை ஆடவும், பாடவும் பயிற்றுவித்து வெற்றியும் காண்கின்றேன்.

இப்புத்தகத்திற்கு வாழ்த்துரை வழங்கிய கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் தேசகீர்த்தி காசீம் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய கலாசார உத்தியோகத்தர் அன்பழகன் அவர்களுக்கும், பின்னட்டையில் பாராட்டுரை வழங்கியமுன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அருளானந்தம் அவர்களுக்கும், எஸ்.எஸ் டிஜிட்டல் அச்சகத்தாருக்கும், எனது இலக்கிய பயணத்திற்கு ஒத்தாசை புரியும் அன்புக்கணவன், பெற்றோர், மகன் மிப்ராஸ், சகோதரர்கள், அபிமானிகள் அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்!

திருமதி: ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்,
எகுத்தார் ஹாஜியார் வீதி,
கிண்ணியா - 06
தொ. பே. இல - 026- 2236487.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | விளக்கம் தாருங்கள் | ... 03 |
| 2. | சுட்டிப்பையன் | ... 05 |
| 3. | நலமாய் வாழ | ... 07 |
| 4. | விரைந்து வாருங்கள் | ... 09 |
| 5. | மலர்களின் ராணி ரோசா | ... 11 |
| 6. | வயல் காட்சி | ... 13 |
| 7. | சிந்தனை செய்து சிறப்பாய் வாழு | ... 15 |
| 8. | மரம் நடுவோம் | ... 17 |
| 9. | உழைத்து வாழ்ந்திடு | ... 19 |
| 10. | நல்லதை வளருங்கள் | ... 21 |
| 11. | மழலையின் களிப்பு | ... 23 |
| 12. | நல்லது கெட்டது பிரித்தறி | ... 25 |
| 13. | மகாத்மா காந்தி | ... 27 |
| 14. | வட்டமிடும் பருந்து | ... 29 |
| 15. | அறிவாயோ? | ... 31 |
| 16. | தாகம் தீர்க்கும் கூசா | ... 33 |
| 17. | ஆங்கிலத்தின் அவசியம் | ... 35 |
| 18. | பாய்ந்து வரும் தவளை | ... 37 |
| 19. | புள்ளி மான்கள் | ... 39 |
| 20. | யாழ் தேவி | ... 41 |
| 21. | ஒற்றுமையுள்ள காகம் | ... 43 |
| 22. | தோட்டம் செய்வோம் | ... 45 |
| 23. | நீச்சலடிப்போம் | ... 47 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. டெங்கிலிருந்து பாதுகாப்போம் ... 49
25. வண்ணத்துப் பூச்சி ... 51
26. கோழிச் சேவல் ... 53
27. விடுகதைப் பாடல் ... 55
28. பாட்டுக்கோர் பாரதி ... 57
29. சந்தைக்குப் போவோம் ... 59
30. பசுவின் பயனறிவோம் ... 61
31. சிறுவர்களை வாழவிடு ... 63
32. சாதனைப் பெண் கல்பனா ... 65
33. செந்தாமரை ... 67
34. விருப்பம் போல் கற்போம் ... 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

என்னை ஈன்றெடுத்த அன்பு பெற்றோர்களான ஓய்வு நிலை அதிபர், கலாபூஷணம் எம்.ஈ.எச்.எம். தௌபீக் அவர்களுக்கும், தாய் அபீபா தௌபீக் அவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கம் தாருங்கள்

வானம் என்னும் அரங்கிலே
வறுத்து எடுத்த பொரியினை
விதைத்து வைத்தது யாரது...?
விளக்க மொன்று தாருங்கள்

சூரிய கதிரின் சூட்டிலா
சோளப் பொரிகள் பொரித்தன
காற்று மெல்லத் தொட்டதாலா
கண்கள் சிமிட்டும் தாரகை

எட்டி எடுத்து உண்பதற்கு
ஏணி ஒன்றைத் தாருங்கள்
குட்டித் தம்பி கேட்கிறான்
கொடுக்க எம்மால் முடியுமா...?

மல்லிகைப் பூக்கள் என்று எண்ணியே
மதிதான் கொண்டு சென்றதோ...?
வெள்ளை நிறத்துப் பூக்கள் தான்
வெள்ளி என்று ஆனதோ...?

சுடர் ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டிப் பையன்

குண்டுப் பையன் சிரிக்கிறான்
குட்டிக் கரணம் அடிக்கிறான்
வண்டைத் தேடிச் செல்கிறான்
வம்புக் கிழுத்து மகிழ்கிறான்

சட்டை வேண்டும் என்கிறான்
சண்டித் தனமாய் பேசுகிறான்
தொட்டுப் பார்த்து இரசிக்கிறான்
தரையில் விழுந்தும் புரள்கிறான்

மரத்தைப் பிடுங்கி எறிகிறான்
மணலை அள்ளி வீசுகிறான்
உறவைப் பார்த்து முறைக்கிறான்
உதட்டைப் பல்லால் கடிக்கிறான்

சிட்டாய்ப் பறந்து செல்கிறான்
சன்னல் மேலே நிற்கிறான்
குட்டிப் பையன் குறும்பினை
சுட்டித் தனங்கள் என்பதோ...?

சுடர் ஒளி
*28.10.2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய் வாழ

காகக் கூட்டம் கரையுது பார்
கல்லூரி வளவைச் சுற்றுது பார்
கல்லும் மண்ணும் சோற்றுக்குள்
கிள்ளிச் சிறுவர் எறிகின்றார்


புழுத்துப் போன அரிசிக்குள்
புழுவும் வண்டும் தெரியுது
பள்ளிச் சிறுவர் கண்டதால்
புசிக்க உணவை மறுக்கின்றார்

இருப்பில் இருக்கும் அரிசியில் - வேப்ப
இலையைப் போட்டுக் கோ
பருப்பில் இருக்கும் பூச்சியை –அகற்ற
வண்டின் தோலைப் போட்டுக்கோ

இலவச உணவு என்பதால்
இஸ்டம் போல சமைக்காதீர்
நலமாய்ச் சிறுவர் வளரவே
நல்ல உணவைக் கொடுங்களேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைந்து வாருங்கள்

படிக்கச் சிறுவர் வருகின்றார்
பண்பை மறந்து திரிகின்றார்
நடிக்க விருப்பம் கொள்கின்றார்
நல்லதை மறந்து செல்கின்றார்

இலவச நூலைச் சுமக்கின்றார்
இட்டம் போல நடக்கின்றார்
விலகிச் செல்லும் மாணவருக்கு
விளையாட்டு மூலம் கற்பிப்போம்


கல்வி கற்பது கசப்புத்தான்
கற்று முடிந்தால் இனிப்புத்தான்
விளக்கம் நன்கு தருகின்றோம்
விரைந்து கற்க வாருங்கள்

பண்பைப் புகட்டும் ஆசானை
பணிவாய் மதிக்கப் பழகுங்கள்
கண்ணைப் போன்ற கல்வியை
காலம் பூராய்ப் படியுங்கள்

சுடர் ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்களின் ராணி ரோசா

மலர்களின் ராணி ரோசாவாம்
மனதைக் கவரும் ரோசாவாம்
மலர்ந்து அழகைக் கூட்டுமாம்
முள்ளின் மீதும் விரியுமாம்

பல பல நிறங்களில் பூக்குமாம்
பலரையும் விரும்ப வைக்குமாம்
வளர்ப்பது சற்றுச் சிரமம்தான்
வளர்ந்து பூத்தால் அழகுதான்

நேருவின் சட்டையில் இருக்குமாம்
நெருங்கிய நட்புக்கும் உதவுமாம்
மருத்துவப் பயன்களும் தந்திடுமாம்
மாலை தொடுக்க உகந்ததுவாம்

நாட்டின் ஏற்றுமதி மலராகும்
நங்கையர் சூடும் பூவாகும்
வீட்டின் எழிலை அலங்கரிக்க
வாசலின் முன்னே நாட்டிடுவோம்

**தினகரன்**
*11.12.2011*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல் காட்சி

பச்சைப் பசேலெனப் பயிர்கள்
பார்க்க அழகு ஊட்டும்
இச்சை கொள்ள வைக்கும்
இனிய வயல் காட்சி

வரம் புயரக் கட்டி
வாய்க்கால் வழியே நீரும்
வந்து சேரும் வயலில்
வண்ண மீன்கள் பாயும்

காற்று மெல்ல வீசும்
கதிர்கள் நடனம் புரியும்
பறவை இனங்கள் வந்து
பலதும் பேசிச் செல்லும்

மஞ்சள் நிறமாய் கதிர்கள்
மனதுக் கினிமை ஊட்டும்
கஞ்சத் தனங்கள் இன்றி
களைப்பைப் போக்கும் வயல்கள்

**நவமணி :**
***05.10.2011***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய்து சிறப்பாய் வாழு

சின்னப் பாப்பா சொல்வதைக் கேளு
சிந்தனை செய்து சிறப்பாய் வாழு
இன்னல் மறந்து இரசித்தே வாழு
இதமாய்ப் பேசி இனிதாய் வாழு

மனதில் தீயதை வெறுத்தே வாழு
மாசுக்கள் இன்றி சிரித்தே வாழு
இனங்கள் பார்ப்பதை மறந்தே வாழு
இகத்தில் சாதனை புரிந்தே வாழு

நயமாய் பேசி நலமாய் வாழு
நட்பாய் பழகி உயர்வாய் வாழு
சுயமாய் உழைத்து சுகமாய் வாழு
கயமை நீங்கி கனிவாய் வாழு

உயர்வைக் கண்டால் போற்றி வாழு
உதவி செய்து இணைந்து வாழு
முயற்சி செய்து திறமாய் வாழு
முடிவு கண்டு மகிழ்ந்தே வாழு

சுடர் ஒளி
*23.09.2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் நடுவோம்

மரம் வளர்ப்போம் எங்குமே
மண் வளத்தைக் காப்போமே
உரம் போட்டு வளர்ப்போமே
உச்ச பயனை அடைவோமே

மண் அரிப்பைத் தடுக்குமே
மழை பெறவும் வைக்குமே
கண்ணைப் போன்று காத்திட
கன்று நிறைய நடுவோமே

நிழல் பெறவும் வளர்ப்போமே
நல்ல காற்றைப் பெறுவோமே
சூழல் அழகைப் பேணவே
சுற்றும் மரத்தை நடுவோமே

வெள்ளப் பெருக்கை தடுக்கவும்
விறகு போட்டுச் சமைக்கவும்
வளவு நிறைய மரங்களை
வளர்த்துப் பொழுதைக் களிப்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைத்து வாழ்ந்திடு

உழைக்கும் கரங்கள் உள்ளதனால்
உழைத்து நீயும் வாழ்ந்திடு
களைத்து நீயும் சோர்ந்திடாது
களிப்பாய் உழைக்கப் பழகிடு

பாடு பட்டு உழைத்திட்டால்
பாரில் சிறப்பாய் வாழ்ந்திடலாம்
தேடுதலின்றி சோம்பாதே
தரித்திரம் உன்னைத் தொடர்ந்திடுமே


பகலவன் ஒளியை நிறுத்தினால்
பாரே இருளில் மூழ்கிவிடும்
குவலயம் சுழல மறுத்தாலோ
அவலம் எங்கும் நிறைந்திடுமே

உறுதி கொண்டே உழைத்திட்டால்
உயர்வு கண்டு மகிழ்ந்திடலாம்
இறுதி வரைக்கும் முயற்சித்தால்
இலக்கை அடைந்து கொள்ளலாம்

சுடர் ஒளி
*04.11.2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதை வளருங்கள்

அன்பு கொண்ட சிறுவர்களே
அறிவைத் தேடிப் படியுங்கள்
அகிம்சை வழியில் செல்லுங்கள்
அகிலம் போற்ற வாழுங்கள்

ஆத்தி சூடி படியுங்கள்
ஆசாரம் முறையாய்ப் பேணுங்கள்
ஆலோசனை ஏற்று நடவுங்கள்
ஆன்மீகம் நெஞ்சில் வளருங்கள்

இறைவன் படைத்த இயற்கையை
இயன்ற வரைக்கும் இரசியுங்கள்
இகத்தில் நல்லவை செய்யுங்கள்
இன்பமாய் வாழப் பழகுங்கள்

உயர்வைக் கண்டால் மகிழுங்கள்
உறவைப் பேணி நடவுங்கள்
உண்மையை அறிந்து பேசுங்கள்
உள்ளத்தில் தீயதை அகற்றுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலையின் களிப்பு

பத்து மாதம் சுமந்து
பாரில் உன்னை வளர்த்தேன்
சத்தம் போட்டு அழுது
சலிப்பை ஏனோ தருகிறாய்

முத்தம் ஒன்று தாரேன்
முகத்தைக் கொஞ்சம் காட்டு
நித்தம் உந்தன் மீது
நேசம் வைத்தேன் நானும்

கண்ணால் கதைகள் பேசு
குறும்பாய் கோபம் கொள்ளு
விண்ணைப் படைத்த நாயன்
உன்னை வீணாய்ப் படைத்தானோ

காலைக் கையை ஆட்டி
கொள்ளை இன்பம் தருவாய்
தோளை இறுகப் பிடிப்பாய்
தொல்லை மறந்து சிரிப்பாய்

சுடர் ஒளி
*30.09.2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லது கெட்டது பிரித்தறி

பொய் பேசி வாழ்ந்து நீ
பெரும் பாவம் தேடாதே
மெய் கூறி நடப்பதனால்
மகிழ்வாய் எதையும் அடையலாம்

திருடி வாழ்ந்து பழகாதே
தண்டனை நிறையப் பெறுவாயே
கருணை காட்டிப் பழகினால்
கவலை மறந்து வாழலாம்

பேராசை நெஞ்சில் வளர்க்காதே
பேராபத்து நேரும் அறிவாயோ
வறுமையில் வாடி மாண்டாலும்
வஞ்சனை செய்ய நினைக்காதே

துன்பம் நாளும் தொடர்ந்தாலும்
துரோகம் செய்ய நினைக்காதே
தெய்வம் நமக்குத் துணையாகும்
தைரியம் நெஞ்சுக்கு இதமாகும்

**விடிவெள்ளி**
***20.09.2011***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி

குஜராத் என்னும் மானிலத்தில்
காந்தித் தாத்தா பிறந்தாராம்
கடவுள் பக்தி நிறைந்தவராம்
கருணை உள்ளம் கொண்டவராம்.

சத்திய சோதனை எழுதியவராம்
சட்டம் நன்றாய்க் கற்றவராம்
சத்தியாக் கிரகமும் செய்தவராம்
சரித்திரம் புகழ வாழ்ந்தவராம்

பாரிஸ்டர் பட்டம் பெற்றவராம்
பணிவாய் வாழத் தெரிந்தவராம்
நாட்டுக்குச் சுதந்திரம் எடுத்தவராம்
நல்லவை செய்வதில் சிறந்தவராம்

அகிம்சை வழியில் சென்றவராம்
அடுத்தவர் துயரைக் களைபவராம்
கதராடையை விரும்பி அணிந்தவராம்
கடமையில் நேர்மை கொண்டவராம்

நவமணி
*16.11.2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டமிடும் பருந்து

வானம் என்னும் பரப்பிலே
வட்ட மிட்டுப் பறக்கிறாய்
வைய கத்தில் கோழியை
வாஞ்சையுடனே நோக்குறாய்

கூர்மையான கண்களால்
கூர்ந்து நன்கு பார்க்கிறாய்
கூர்மை மிக்க நகங்களால்
குஞ்சைத் தூக்கிச் செல்கிறாய்


வான மீது பறக்கையில்
வனப்புடனே தெரிகிறாய்
ஊன் உண்ணும் பறவையாய்
உயர உயரப் பறக்கிறாய்

கபில நிறமாய் உடலிலே
கழுத்தைச் சுற்றி வெள்ளையே
கடலின் மேலே மீன்கள் வர
காலால் கிள்ளிச் செல்கிறாய்

**சுடர் ஒளி**
**23.09.2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாயோ...?

குர்ஆனைத் தினமும் ஓதப்பா
கருத்தை விளங்கி ஓதப்பா
குர்ஆன், கதீஸ் வழிமுறையில்
காலம் பூராய் நடந்திடப்பா

வானம் தூணின்றி உயர்ந்ததையும்
வையகம் பரந்து விரிந்ததையும்
கானகம் எழிலாய் அமைந்ததையும்
கற்பனை செய்து பார்த்திடப்பா


சூரிய, சந்திர இயக்கத்தையும்
சுற்றும் பூமியின் அசைவினையும்
மறுமை ஒன்று உள்ளதையும்
மரணம் உணர்த்தும் அறிவாயோ?

ஒட்டக அமைப்பின் வடிவினையும்
ஓடும் நீரின் வேகத்தையும்
கருவில் குழந்தை வளர்வதையும்
கற்பனை செய்து பார்த்தாயா?

**விடிவெள்ளி**
***10.11.2011***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம் தீர்க்கும் கூசா

மண்ணால் செய்த பாத்திரம்
மனதைக் கவரும் பாத்திரம்
தண்ணீர் வைக்கும் பாத்திரம்
தாகம் தீர்க்கும் பாத்திரம்

கோடை காலம் என்றாலோ
குளிர்ந்த நீரைப் பெறுவோமே
மூடி போட்ட கூசாவை
மேசையின் மீது வைப்போமே

கொதித்து ஆறிய நீரையும்
குளிர வைத்துப் பருகலாம்
பாதுகாப்பு நிறைந்ததாம்
பழைமை வாய்ந்த பாத்திரம்

வர்ணப் பூச்சு கோலமாய்
வாகாய் காட்சி தருகிறது
தரத்தைப் பார்த்து வாங்கியே
தாகம் தீர்த்து மகிழலாம்

சுடர் ஒளி
*02.09.2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலத்தின் அவசியம்

உலகில் ஆங்கிலம் அவசியமே
உணர்ந்து நாளும் கற்போமே
விலகித் தூர ஓடாமல்
விளங்கி ஆங்கிலம் கற்போமே

பேசிப் பழக அஞ்சாமல்
பலரோடும் சரளமாய்க் கதைப்போமே
நேசம் வைத்து ஆங்கிலத்தை
நெஞ்சில் ஆழப் பதிப்போமே


அலுவல்கள் யாவும் முடிப்பதற்கு
ஆங்கிலம் தெரிதல் அவசியமே
அலுப்பு மனதில் தோன்றாமல்
அனைவரும் ஆங்கிலம் படிப்போமே

சிறியார் பெரியார் பாராமல்
சிறப்பாய் ஆங்கிலம் கற்போமே
உரிய முறையில் பயின்றே-நாம்
உலகினைச் சுற்றி வருவோமே

**நவமணி**
***10.05.2009***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய்ந்து வரும் தவளை

தவளை தவளை ஓடிவா
தத்தித் தத்திப் பாய்ந்து வா
தண்ணீர் மேலே நீந்தி வா
தரையைக் கண்டால் பாய்ந்து வா


சத்தம் போட்டுக் கத்தி நீ
சலிப்பை மனதில் ஊட்டுகிறாய்
தாவித் தாவிப் பாய்ந்தும் நீ
தரணி எங்கும் செல்கின்றாய்

மாரி காலம் என்றாலோ
மகிழ்வாய் துள்ளிக் குதிக்கின்றாய்
நீரில் நிலத்தில் வாழ்வதால்
ஈரூடக வாழி என்கின்றோம்

பூச்சி புழுவை உண்கின்றாய்
புதரில் பதுங்கி வாழ்கின்றாய்
குஞ்சை நீரில் பொரிக்கின்றாய்
குதித்துக் குதித்துச் செல்கின்றாய்

**நவமணி**
***28.09.2012***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளி மான்கள்

புள்ளி மான்கள் ஓடுது
புல்லைத் தின்று வளருது
துள்ளி ஓடி மருளுது
தூர நின்று பார்ப்போமே

கண்கள் அழகைப் பாரங்கே
காரிகைக் கதுவே ஒப்பாகும்
தண்ணீர் தேடிக் குளத்தினை
தன்னந் தனியே செல்லுது


நீண்ட கொம்பு இரண்டுண்டு
நடை பயின்று செல்லுது
சின்னஞ் சிறு வாலுடன்
செம் மஞ்சளாய் ஜொலிக்குது

பட்டுப் போன்ற உடலினை
பார்க்க அழகு ஊட்டுதே
கிட்டச் சென்று தொட்டதும்
குறும்பு செய்து காட்டுது

நவமணி
*23.10.2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் தேவி

வடக்கு நண்பன் யாழ் தேவி
வாகாய்ப் போகும் புகைவண்டி
தடல் புடலாய் ஓடுமாம்
தண்ட வாளம் செல்லுமாம்

சாதி பேதம் பாராமல்
சகல ரையும் ஏற்றுமாம்
வீதியிலும் ஓடுமாம்
விரைவாய்க் கடமை செய்யுமாம்


காடு,மலை தாண்டியே
காத தூரம் செல்லுமாம்
மேடு பள்ளம் நோக்கியே
நகர்ந்து போகும் யாழ்தேவி

பாது காப்பு நிறைந்ததாம்
பயணம் செய்ய உகந்ததாம்
சூது வாது இன்றியே
எல்லோரையும் ஏற்றுமாம்

**நவமணி**
***12.07.2009***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையுள்ள காகம்

கரைந்து கரைந்து பறக்கிறாய்
காகா...கா என்று கத்துகிறாய்
கண்ணை உருட்டிப் பார்க்கிறாய்
காலம் பூராய் அலைகிறாய்

உணவைக் கண்டால் அழைக்கிறாய்
உறவைக் கூட்டி உண்கிறாய்
மனதில் கருணை கொள்கிறாய்
மகிழ்வாய் பகிர்ந்தே கொடுக்கிறாய்


புவியில் மீதம் இல்லாமல்
புசித்து உணவை மகிழ்கிறாய்
பாரில் அழுக்குச் சேராமல்
புவியைச் சுத்தம் செய்கிறாய்

கறுப்பு நிறமாய் இருந்தாலும்
கல கலப்பாய்ப் பழகுகிறாய்
வெறுப்பு அகத்தில் கொள்ளாமல்
வியக்கும் வகையில் செய்கிறாய்

**நவமணி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டம் செய்வோம்

தோழர்களாய் சேர்ந்து நாம்
தோட்டம் ஒன்று அமைப்போம்
பழ மரங்கள் நாட்டுவோம்
பயன்கள் பெற்று மகிழ்வோம்

பந்தலில் காய்க்கும் புடலங்காய்
பாரந் தூக்கி நிற்குதே
படர்ந்து படரந்து அவரையும்
பூவும் பிஞ்சும் காய்க்குதே

மிளகாய் தக்காளிச் செடிகளிலே
மிடுக்காய்ப் பூக்கள் தெரியுதே
அழகாய்ப் பார்த்து இரசிக்கையில்
அணியாய்க் காட்சி தருகுதே

வரம்பு மேலே வற்றாளை
வளைந்து நெளிந்து படருதே
குரக்கன் சோளம் தானியமும்
கொத்துக் கொத்தாய்ப் பூக்குதே

**நவமணி**
***30.10.2011***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீச்சலடிப்போம்

நீச்சல் அடிக்க ஆசையா...
நீந்திப் பழக வாருங்கள்
அச்சம் ஏதும் இன்றியே
ஆற்றில் குளிப்போம் வாருங்கள்

கூச்சல் போட்டுக் கத்தாமல்
காலைக் கையை ஆட்டுவோம்
மூச்சை அடக்கி மூழ்கியே
முறையாய் நீந்திப் பழகுவோம்


துணிச்சல் மிக்க வீரனாய்
துள்ளிக் குதித்து நீந்துவோம்
அணியாய் நீந்திச் செல்லுவோம்
ஆழம் அறிந்தே நீந்துவோம்

திடமாய் உடலை வைத்திட
தேகப் பயிற்சி நீச்சலாம்
தடைகள் இன்றி நாமுமே
தானாய் நீந்திப் பழகுவோம்

**சுடர் ஒளி**
***07.10.2012***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கிலிருந்து பாதுகாப்போம்

உந்தன் பெயரா டெங்கு...?
உலகை நடுக்கும் கொடியன்
எந்த இனமாய் இருந்தாலும்
எழுந்து நடக்க முடியாது


உடலில் சிவப்புப் புள்ளி
உயிரைப் பறிக்கும் துஸ்டன்
ஈவு இரக்கம் இன்றியே
ஈடிஸ் நுளம்பின் தாக்கம்

உணவை உண்ண முடியாது
உடலும் சோர்ந்து போகும்
நினைவை இழக்கச் செய்யும்
நிறையோ குறைந்து போகும்

பேணி,சிரட்டை,கோம்பை
புதைத்து நாளும் வருவோம்
காணியைச் சுத்தம் செய்வோம்
காப்போம் டெங்கின் அபாயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப் பூச்சி

சிறகை விரித்துப் பறக்குது
சிறுவர் கூட்டம் பிடிக்குது
பறவை போல வானிலே
பறந்து மேலே செல்லுது

பூவின் மேலே மொய்க்குது
புவியைச் சுற்றி வருகுது
தேனைக் குடித்து மகிழுது
தேவை முடித்துப் பறக்குது


கறுப்பு,சிவப்பு,மஞ்சளாய்
களிப்பாய் எங்கும் அலையிது
விரும்பி மனிதன் இரசிக்கவே
வியக்க நாளும் வைக்குது

பட்டுச் சிறகை அசைத்துமே
பட்டாம் பூச்சி பறக்குது
எட்டு நாளின் வாழ்க்கையில்
எல்லோர் மனதைக் கவருது

சுடர் ஒளி
23.12.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிச் சேவல்

அதிகாலையில் தினமும் எழுந்திடுவேன்
அனைவரையும் கூவி எழுப்பிடுவேன்
உதயம் கண்டு மகிழ்ந்திடுவேன்
உணவைத் தேடி அலைந்திடுவேன்


சிறகை அடித்துக் கூவிடுவேன்
சுறுசுறுப்பாய் என்றும் இயங்கிடுவேன்
உறவை அழைத்துச் சென்றிடுவேன்
உறங்க மரத்தில் ஏறிடுவேன்

குப்பை மேட்டைக் கிளறிடுவேன்
கொத்திக் கொத்தி உண்டிடுவேன்
பேட்டுக் கோழிக்குத் துணையாவேன்
பருந்தைக் கண்டால் தாக்கிடுவேன்

நன்மைகள் பலவும் நான் செய்தும்
நன்றி மறந்த மானிடரோ
கொன்று என்னை உண்கின்றார்
கொஞ்சம் கருணை காட்டாரோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைப் பாடல்

காலையில் கூவி எழுப்பிடுமாம்
கறுப்பு மேனி உடையதுவாம்
கூடு கட்டத் தெரியாதாம்
காகக் கூட்டில் வளர்ந்திடுமாம்
அது என்ன...? குயில்

வீட்டைக் காவல் காத்திடுமாம்
வாலை வாலை ஆட்டிடுமாம்
நன்றி மிக்க மிருகமாம்
மோப்ப சக்தி கொண்டதுவாம்
அது என்ன...? நாய்

பழங்களை விரும்பி உண்டிடுமாம்
பறவையில் பச்சை நிறமதுவாம்
கொச்சை மொழியில் பேசிடுமாம்
கூட்டாய் வானில் பறந்திடுமாம்
அது என்ன...? கிளி

இரவு நேரம் விழித்திடுமாம்
இரையைத் தேடிச் சென்றிடுமாம்
சத்தம் எழுப்பிப் பறந்திடுமாம்
கனிதரும் மரத்தைத் தேடிடமாம்
அது என்ன...? வௌவால்

**நவமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுக்கோர் பாரதி

எட்டய புரத்தில் பிறந்தவனாம்
ஏழ்மையை வாழ்வில் கொண்டவனாம்
எளிதாய்க் கவிகள் யாத்தவனாம்
எல்லோர் நெஞ்சிலும் வாழ்பவனாம்

சொல்லில் இனிமை சேர்ப்பவனாம்
செயலில் வீரம் கொண்டவனாம்
கல்வியைக் கசடறக் கற்றவனாம்
குழந்தைக் கவிகள் படைத்தவனாம்

சாதிப் பேயை ஒழித்தவனாம்
சமமாய் வாழச் செய்பவனாம்
நீதியைப் போற்றி வந்தவனாம்
நித்தமும் தமிழை வளர்த்தவனாம்

அந்நியர் ஆட்சியை வெறுத்தவனாம்
அடிமைக்கு விடுதலை கொடுத்தவனாம்
நிந்தனை செய்வதைத் தடுத்தவனாம்
நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றவனாம்

**தினகரன்-19.9.2010**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைக்குப் போவோம்

காய் கறிகள் வாங்கலாம்
கீரை,மீன் வாங்கலாம்
நோய்கள் இன்றி வாழவே
நல்ல உணவை வாங்கலாம்

சீனி மிட்டாய் வாங்கியே
சிறுவர்க்குக் கொடுக்கலாம்
சனக் கூட்டம் பார்க்கலாம்
சந்தைக்கு நாம் போகலாம்


இரைச்சல் சத்தம் நடுவிலும்
இஸ்டம் போல வாங்கலாம்
தரையில் கிடக்கும் பொருளிலும்
தரம் பார்த்து வாங்கலாம்

விலை குறைத்தும் வாங்கலாம்
விரும்பிய பொருளை எடுக்கலாம்
மாலை நேரமானதும்
மக்கள் கூட்டம் களைந்திடும்

தினகரன்-26.9.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவின் பயனறிவோம்

பசுவின் நண்பன் மனிதனாம்
பாலைக் கறந்து குடிக்கிறான்-தாய்ப்
பாலே இல்லாக் குழந்தைக்கும்
பசுவின் பாலைக் கொடுக்கிறான்


பாலும் தயிரும் இறைச்சியும்
பசுவில் மனிதன் பெறுகிறான்
நாளும் நிறை உணவாக
நன்றாய்ப் பாலைப் பருகிறான்

புல்லைப் பசு மேய்ந்தாலும்
புசிக்க உணவு தருகிறது
தொல்லை இன்றி வளர்த்தாலோ
தேவைக்கு அதுவே உதவுமாம்

தயக்க மின்றி வளர்க்கலாம்
தனவந் தனாய் ஆகலாம்
பயன்கள் பலவும் தருவதால்
பசுவின் நண்பன் மனிதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை வாழவிடு

பிஞ்சு நெஞ்சை வதைக்காதே
பிரம்பைக் காட்டி விரட்டாதே
அஞ்சி ஒடுக்கி வைக்காதே
அறிவை நாளும் சிதைக்காதே

சிறுவரை வேலைக்கு அமர்த்தாதே
சீறிச் சினந்தும் நிற்காதே
சிறுவரே நாளைய தலைவர்கள்
சிறந்த கல்வியை வழங்கிவிடு

கெட்ட வார்த்தை பேசாதே
கேடுகள் விளையும் மறவாதே
நாட்டுக்கு விசுவாசம் உள்ளவராய்
நல்லதை மனதில் புகுத்திவிடு

பாலியல் உணர்வைத் தூண்டாது
பக்தியை அகத்தில் வளர்த்துவிடு
ஆளுமை மிக்க சிறுவர்களாய்
அவனியில் என்றும் வாழவிடு

சிறுவர்தினம்-01,10
தினக்குரல்
25.11.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைப்பெண் கல்பனா

கர்னல் என்ற ஊரினிலே
கல்பனா பிறந்தார் புவியினிலே
கற்பனை செய்வதில் வல்லவளாம்
கற்றலில் ஆர்வம் கொண்டவளாம்


அமெரிக்கா சென்று படித்தவளாம்
அறிவியல் தேர்ச்சி பெற்றவளாம்
ஆராய்ச்சியில் முதன்மை வகித்தவளாம்
அண்டவெளியில் பயணம் செய்தவளாம்

முயற்சியில் உயர்ச்சி கண்டவளாம்
முதுகலைப் பட்டமும் பெற்றவளாம்
வெற்றியை உலகிற்கு அறிவிப்பதற்குள்-விண்ணோடம்
வெடித்துச் சிதறி மாண்டாளாம்

விண்ணிலே வரலாறு படைத்தவளாம்
வீரமங்கை கல்பனா சாவ்லாவாம்
பெண்ணுக்குப் பெருமை சேர்த்தவளாம்
புகழை உலகிற்குத் தந்தவளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தாமரை

குளத்தில் மலரும் தாமரை
கூம்பி நிற்கும் தாமரை
வளர்ச்சி உள்ள தாமரை
வாசம் இல்லாத் தாமரை

தண்டு கொண்ட தாமரை
தண்ணீர் ஒட்டாத் தாமரை
வண்டு துயிலும் தாமரை
வண்ணம் உள்ள தாமரை

சேற்றில் முளைத்த தாமரை
செக்கச் சிவந்த தாமரை
காற்றில் ஆடும் தாமரை
களிப்பைத் தரும் தாமரை

மருந்தாய் உதவும் தாமரை
மகத்துவம் மிக்க தாமரை-கவிக்கு
கருவாய் அமையும் தாமரை
கறிக்கு உதவும் தாமரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்பம் போல் கற்போம்

பாடசாலை சென்றுநாம்
பாடம் நன்றாய்க் கற்போமே
கடமை என்ற உணர்வுடனே
கல்வி கற்று உயர்வோமே!

வகுப்பில் அமைதி பேணியே
வழுவ ஒழுக்கம் காப்போமே
தொகுப்பாய் பொருட்கள் யாவுமே
தொலைந்திடாமல் பார்ப்போமே !

நல்ல பழக்கம் பழகுவோம்
நாடி மதிப்பை ஈட்டுவோம்
கூளம் குப்பை அகற்றுவோம்
கூடி ஒன்றாய்ப் பெருக்குவோம்!

விரும்பிக் கருத்தாய் படிப்போமே
விளக்கம் புரிந்து தெளிவோமே
கருவ மின்றிக் கற்போமே
கல்விச் செல்வம் பெருகுமே!

சுடர் ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

01. பாலர் பாடல் - சிறுவர் இலக்கியம் - 1991

02. சின்னக்குயில் - சிறுவர் இலக்கியம் - 2009

03. பிரியமான சினேகிதி - சிறுகதை - 2009

04. மிதுஹாவின் நந்தவனம் - சிறுவர் கதை - 2010

05. கட்டுரை எழுதுவோம் - ( 3 - 5 வகுப்புக்களுக்குரியது) - 2010

06. முப்லிஹாவின் சிறுவர் கானங்கள் - சிறுவர் இலக்கியம் - 2012

07. மழலையல் மாருதம் - சிறுவர் உளவியல் கட்டுரைகள் - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந் நூலாசிரியர்

திருமதி. ஜெனீரா தௌபீக் ஹைருள் அமான் அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. திருக்கோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் பெண்ணெழுத்தாளர் வரிசையில் முன்னணியில் நிற்பவர். ஆசிரியராகச் சேவையாற்றும் ஜெனீரா இலக்கியக் குடும்பத்தில் உதித்தவர். அவரது தந்தை பலபரிசுகள்பெற்ற ஓய்வுநிலை அதிபரும் எழுத்தாளரும் ஆவார். கணவர் ஹைருள் அமான் அவர்கள் சிறந்ததொரு ஆசிரியர். நகமும் தசையுமாக வாழும் இவர்கள் இருவரும் ஆளுக்காள் உதவியாக இருந்து இலக்கியச் சேவையினை முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

ஒரு குடும்பப் பெண்ணாகவும் பாடசாலையின் ஆசிரியராகவும். தாயாகவும். தாரமாகவும் இருந்து கொண்டு இலக்கியச் சேவை செய்வதென்பது பாரிய சவாலாகும். அவை யாவற்றுக்கும் மத்தியிலும் துணிந்து எழுதுகிறார் என்றால் அதற்குக் காரணம் நல்ல மனமுள்ள அவரது கணவர் ஹைருள் அமானின் அருந்துணையிருப்பதால்தான் என்று நினைக்கிறேன்.

இதுவரை பல நூல்களை எழுதிய ஜெனீராவின் சின்னக்குயில் பாட்டு பரிசு பெற்ற நூலாகும். 'முப்லிஹாவின் சிறுவர் பாடல்கள்' என்ற நூலில் 34 அருமையான பாடல்கள் உள்ளன. அனைத்தையும் வாய்விட்டுப் படிக்கும்போது இனிக்கும் வண்ணம் அமைந்துள்ளன. நல்ல படிப்பினைகளைக் கொண்டுள்ளன. எந்த மெட்டிலும் இப்பாடல்களைப் பாடலாம். தரமான கவிதாயினியாக விளங்கும் ஜெனீரா தௌபீக் ஹைருள் அமானின் நூல்களை வாங்கித் தமது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வழங்கிப் படித்துப் பயனுறச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளின் பிறந்த நாளுக்குப் பரிசாக இவ்வாறான நமது எழுத்தாளர்களின் நூல்களை வாங்கிப் பரிசாகக் கொடுத்து அவர்களை ஏற்றம் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து ஜெனீரா தௌபீக் ஹைருள் அமான் எழுதிச் சாதனைகள் படைக்க வாழ்த்துகிறேன்.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்

9 789550 161010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: SS Digital's 0715415854